**செய்தி வெளியீடு எண் : 094** **நாள் : 12.01.2024**

**சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில், 48 வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில், 48 வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியின் தொடக்க விழா, தீவுத்திடல் அறிஞர் அண்ணா கலையரங்கில் இன்று (12.01.2024) சிறப்புடன் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 48 வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியை தொடங்கி வைத்தார். மேலும் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கங்களை பார்வையிட்டார்.

48 வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023 – 2024 ஐ யொட்டி, "சுற்றுலா மற்றும் பசுமை முதலீடுகள்" என்ற இந்தாண்டிற்கான கருப்பொருளை மையமாக கொண்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, நான் முதல்வன் திட்டம், காவல்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை, தொழில், முதலீடு மற்றும் வர்த்தகத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, பள்ளி கல்வித்துறை, உயர் கல்வித்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பட்டு வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை, சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, சி.எம்.டி.எ, ஆவின், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை மாநகராட்சி உள்பட தமிழ்நாடு அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அரங்கங்கள் – 49, ஒன்றிய அரசு நிறுவனங்களின் 2 அரங்கங்கள், என மொத்தம் – 51 அரங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்து சமய அறநிலையத்துறை அரங்கில் சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள பிரசித்திப்பெற்ற திருக்கோயில்களிலிருந்து பிரசாதங்கள் வருவிக்கப்பட்டு, பொருட்காட்சிக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு தினந்தோறும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரங்கில் முழு உடல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை, இதய வரைவலை பரிசோதனைகள் உள்பட பல்வேறு மருத்துவ ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கி அரங்கில் பழைய கிழிந்த ரூபாய் நோட்டுகள் மாற்றி புதிய ரூபாய் நோட்டுகள் வழங்கவும், சில்லரை நாணயங்கள் மற்றும் புதிய ரூபாய் நோட்டுகள் வழங்கப்பட உள்ளன.

இவை தவிர தனியார் கடைகள், அரங்கங்கள் அமைக்கப்பட்டு பொருட்காட்சி நடைபெறுவதன் மூலம் நேரடியாக சுமார் 5,000 பேரும், மறைமுகமாக சுமார் 30,000 நபர்களுக்கும் வேவைவாய்ப்பை வழங்கியுள்ளது.

80,000 சதுர அடி பரப்பளவில் பொழுதுபோக்கு வளாகம் அமைந்துள்ளது. பொருட்காட்சிக்கு வருகை தரும் பொது மக்கள் வசதிக்காக சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாக சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 12.00 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கண்டுகளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

48 வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியினை தொடங்கி வைத்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்தாவது,

48 வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்கட்சியை தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இங்கு வந்ததில் எனக்கு பழைய நினைவுகள் வருகின்றன. நான் பள்ளியில் படிக்கும்போது, 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு எப்போதெல்லாம் சுற்றுலா பொருட்காட்சி நடைபெறுமோ அப்போதெல்லாம், என்னுடைய சகோதரிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த குடும்பத்தாருடன் பலமுறை வந்து இந்த பொருட்காட்சியை சுற்றிப் பார்த்துவிட்டு செல்வது வழக்கம். இப்போது அதே பொருட்காட்சியை திறந்து வைப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பது பெருமையாக உள்ளது.

நான் பொறுப்பு வகிக்கக் கூடிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அரங்கமும் இந்த பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருப்பது கூடுதல் மகிழ்ச்சியாகும். என்னுடைய துறையின் சார்பில் எடுக்கப்பட்டிருக்கக் கூடிய

பல்வேறு பணிகள், நிகழ்ச்சிகள், பல்வேறு முன்னெடுப்புகள் குறித்த விளக்கங்கள் அந்த அரங்கத்திலே அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து துறைகளின் சார்பில் இந்த இரண்டறை ஆண்டு காலத்தில் என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன, என்னென்ன திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்று ஒவ்வொரு அரங்கத்திலேயும் சிறப்பாக விளக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், பத்திரிக்கை நண்பர்களெல்லாம், கண்காட்சி அரங்கங்களை பார்வையிட்டு அனைத்து பொதுமக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பொருட்காட்சியை திறக்கின்ற வாய்ப்பு கிடைத்தும் என்னால் வரமுடிய வில்லை. அடுத்த 70 நாட்கள் இந்த பொருட்காட்சி நடைபெற இருக்கின்றது. எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த பொருட்காட்சியை பார்வையிட்டு, அரசு திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு, பொருட்காட்சியின் நோக்கத்தை வெற்றியாக்கி காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பரந்தாமன், துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர்/சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர்/ மேலாண்மை இயக்குநர், திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in